රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව
சுதந்திர சதுக்கம் கொழும்பு 07 இலங்கை.
Independence Square, Colombo 07, Sri Lanka.

මගේ අංකය / எனது இல / My No: MPubAd/AcSD/13/පොදු

ඔබේ අංකය / உமது இல / Your No:

දිනය / திகதி / Date: 2024.06.28

அமைச்சின் செயலாளர்கள்
மாகாணத் தலைமைச் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**<u>அரச சேவையின் பதவிகளுக்கு நியமித்தல் / பதவி உயர்த்துதலுக்கு ஏற்புடையவாறு சேவைப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்படும் கல்வி/தொழில் தகைமைகளுக்கு ஏற்புடைய சான்றிதழ்களின் செல்லுபடியாகும் தன்மையினை உறுதிப்படுத்தல் – இலங்கை கணக்காளர் சேவை</u>**

சேவைப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நியமனங்கள் / பதவி உயர்வுகளின்போது தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக உத்தியோகத்தர்களால் சமர்ப்பிக்கப்படும் கல்வி/தொழில் தகைமைகளுக்கு ஏற்புடைய சான்றிதழ்களை, ஏற்புடைய பதவிகளின் நிர்வாக அதிகாரத்தைக்கொண்ட அமைச்சின் செயலாளர்களால் அந்த சான்றிதழ்கள் வழங்கப்பட்ட நிறுவனத்தின் மூலமே உறுதிப்படுத்திக்கொண்ட பின்னர் பொதுச்சேவை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்க வேண்டும் என அவ் ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாக பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரது இலக்கம் PSC/PRO/HB/26/2023 மற்றும் 2023.08.25 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

02. மேலும் தகைமைகளுக்கு ஏற்புடைய சான்றிதழ்களின் செல்லுபடியாகும் தன்மையினை உறுதிப்படுத்திக்கொள்வது தொடர்பாக பொதுச்சேவை ஆணைக்குழுவினால் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளதாக அவ் ஆணைக்குழுவின் செயலாளரது இலக்கம் PSC/PRO/HB/26/2023 மற்றும் 2023.11.29 ஆம் திகதிய கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

i. தகைமைகளுக்கு ஏற்புடைய சான்றிதழ்களின் செல்லுபடியாகும் தன்மையினை உறுதிப்படுத்தும்போது ஏற்கவேண்டிய செலவுகளை சான்றிதழைப் பெறும் உத்தியோகத்தர் ஏற்க வேண்டும் என

ii. அரசினால் வழங்கப்படும் வெளிநாட்டு புலமைப்பரிசிலின் கீழ் தெரிவுச் செயன்முறையொன்றின்படி தெரிவு செய்யப்பட்ட வெளிநாட்டுப் பட்டக் கற்கைநெறிகளை மேற்கொள்ளும் புலமைப்பரிசில் வழங்கப்பட்ட உத்தியோகத்தர்கள் நிறைவு செய்துள்ள பட்டப்பின் கற்கைநெறிச் சான்றிதழ்களின் செல்லுபடியாகும் தன்மையினை உறுதிப்படுத்திக் கொள்ளவதற்கான அவசியம் இல்லை என

03. அதன்படி இனிவரும் காலங்களில் இலங்கை கணக்காளர் சேவையின் தரம் I இற்கு மற்றும் விஷேட தரத்துக்கு பதவி உயர்வுக்கு விண்ணப்பிக்க எதிர்பார்க்கும் உத்தியோகத்தர்களது பட்டப்பின் கற்கைநெறிகளுக்கு ஏற்புடைய பல்கலைக்கழகங்களிலிருந்து உறுதிப்படுத்திக்கொள்வதற்காக பட்டப்பின் படிப்பைப் பூர்த்தி செய்த பின்னர் பின்வரும் ஆவணங்களை செயலாளர், பொது நிருவாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, சுதந்திர சதுக்கம், கொழும்பு 07 என்ற முகவரிக்கு விரைவாக அனுப்புமாறு தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

i. பட்டப்பின் படிப்புக்கு ஏற்புடைய பட்டச் சான்றிதழின் மற்றும் விளக்கமான பெறுபேற்றுச் சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள்

ii. வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டப்பின் படிப்பை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக ஏற்புடைய பல்கலைக்கழகங்களுக்கு அனுப்புவதற்கு பல்கலைக்கழக நிர்வாகத்தைத் தொடர்புகொண்டு தயாரிக்கப்பட்ட உத்தியோகத்தரது வேண்டுகோள் கடிதம்

දුරකතන / தொலைபேசி / Telephone: 011-2696211-13, 011-2166000
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011-2695279
ඊ-මේල් / மின்னஞ்சல் / E-mail: info@pubad.gov.lk
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website: www.pubad.gov.lk

04. சான்றிதழின் செல்லுபடியாகும் தன்மையினை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக பண அறவீட்டினை ஏதேனுமொரு நிறுவனம் மேற்கொள்ளுமாயின் அப்பணச் செலுத்துகை தொடர்பாக உரிய உத்தியோகத்தர்களை அறிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

05. இது தொடர்பாக இலங்கை கணக்காளர் சேவையின் உத்தியோகத்தர்களுக்குத் தெரியப்படுத்தவும்

ஒப்பம்/ எஸ். ஆலோகபண்டார
மேலதிக செயலாளர் (பொது நிருவாகம்) ( பதில்கடமை)
பொது நிருவாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்குப் பதிலாக


தொலைபேசி : 0112698672
தொலைநகல் : 0112693304
மின்னஞ்சல் : d.acsd.pubad@gmail.com